




சென்னை, வண்டலூரில் ஆசிரியர் தினத்தையொட்டி 386 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை சார்பில், `டாக்டர் இராதாகிருஷ்ணன்' விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினார். உடன் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், எஸ்.ஆர்.ராஜா, சி.வி.எம்.பி.எழிலரசன், வரலட்சுமி மதுசூதனன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர் மதுமதி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் அருண்ராஜ் ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர்.கண்ணப்பன், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், பாடநூல் கழக மேலாண்மை இயக்குநர் சங்கர் ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வித்துறை பல்வேறு இயக்குநர்கள், தொடக்கல்வி இயக்கத்தின் இயக்குநர் முனைவர்.நரேஷ், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் உறுப்பினர் ராஜீவ்காந்தி, ஜாக்டோ ஜியோ தியாகராஜன், அப்துல் ரகுமான் கிரெசன்ட் பல்கலைக்கழக வேந்தர் ஆரிஃப் புகாரி, இணை வேந்தர் அப்துல் காதர் புகாரி, துணைவேந்தர் முனைவர் முருகேசன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ராஜா உசேன், ஆசிரியர்கள் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

## 100 ஆண்டுகளைக் கடந்தது எங்கள் கல்வி வரலாறு!

# இந்தியாவில் மட்டுமல்ல - உலக அளவிலும் தமிழ்நாட்டின் கல்விமுறையே சிறந்தது!

## ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை,செப்.6–**

**சென்னை, வண்டலூரில் ஆசிரியர் தினத்தையொட்டி 386 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை சார்பில், `டாக்டர் இராதாகிருஷ்ணன்' விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.**

**இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி, ``எல்லையற்றக் கல்வியை இல்லையென்று கூறாது, எல்லோருக்கும் கொண்டு சேர்க்கின்ற ஆசிரியர் பெருமக்களுக்கு 'ஆசிரியர் தின' வாழ்த்துகள்' எனக்கூறி வாழ்த்திப் பேசினார்.**

அப்போது 'இந்திய ஒன்றியத்தில் மட்டுமல்ல, உலக அளவிலும் தமிழ்நாட்டின் கல்விமுறையைச் சிறந்து விளங்கச் செய்து வரும் நம் ஆசிரியர்களின் அரும்பணியைப் போற்றுவோம். ஆசிரியர்கள் நலனுக்கு என்றும் துணை நிற்போம்' என்றும் குறிப்பிட்டார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:

முதலில் ஆசிரியர் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஒரு விதமான பதற்றத்தோடுதான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன். ஒரு ஆசிரியரைப் பார்த்தாலே எனக்கு பயம் வந்துவிடும். இத்தனை ஆசிரியர்களை ஒரே அரங்கத்தில் அழைத்து வந்து உட்கார வைத்திருக்கிறார்கள்.

நானெல்லாம் பள்ளியில் ஒரு அவுட் ஸ்டேன்டிங் ஸ்டூடன்ட் அதாவது வெளியில் நிற்கும் மாணவன்தான். பாதி நேரம் வெளியில்தான் நின்று கொண்டிருப்பேன். இன்றைக்கு உங்கள் முன் பேச வாய்ப்பு கொடுத்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆசிரியர் பணி சிறப்பான பணி

இன்று பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக கிட்டத்தட்ட 385 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. உங்கள் அத்தனை பேருக்கும் வாழ்த்துகளை ஒரு மாணவனாக, மாணவர்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர் பணி என்பது மற்ற பணிகளைப்போல கிடையாது. இந்தப் பணி, ஒரு அறிவார்ந்த தலைமுறை உருவாக்குகின்ற ஒரு அறப்பணி என்றே சொல்லலாம். விருது பெறுபவர்கள் மட்டுமல்ல, இன்றைக்கு வகுப்பறையில் பாடம் எடுத்துக் கொண்டிருக்கிற அனைத்து ஆசிரியர்களுக்கும் நம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இந்த நிகழ்ச்சியின் மூலம் நாம் தெரிவித்துக் கொள்வோம்.

கல்வியைக் கொடுக்கின்ற உன்னதமான பணியைத்தான் ஆசிரியர் பெருமக்கள் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். பொதுவாக மாணவர்கள்தான் நன்றாகப் படித்து ஆசிரியர்களிடம் வெரி குட் சான்றிதழ்களை வாங்குவார்கள். ஆனால், இன்றைக்கு ஆசிரியர் பெருமக்கள் நீங்கள் அனைவரும் உங்களின் சிறப்பான பணியின் மூலம் நம் தமிழ்நாடு அரசிடமும், பள்ளிக் கல்வித்துறையிடமும் அந்த சிறந்த ஆசிரியர் சான்றிதழை இன்று வாங்கியிருக்கிறீர்கள். அதற்கு வாழ்த்துகள்.

### திராவிட இயக்கத் தலைவர்கள்

ஒரு வகையில் பார்த்தால், திராவிட இயக்கத் தலைவர்கள் அனைவருமே ஆசிரியர்கள் தான். தமிழ்ச் சமூகத்திற்கு மானமும், அறிவும் ஊட்ட வந்த ஆசிரியர்கள்தான். அதனால்தான்,



தந்தை பெரியார் அவர்களை இப்பொழுதும் நாம் `அறிவு ஆசான்' என்று அழைக்கிறோம்.

அறிவுடன் சேர்த்து மானத்தையும் சொல்லித் தந்தவர் தந்தை பெரியார் அவர்கள் மட்டும் தான். பள்ளிக்கூடத்தில் நீங்கள் பாடம் நடத்துவதைப் போலவே, தந்தை பெரியார் அவர்களும் பகுத்தறிவுக் கருத்துகளை மக்களுக்குப் புரிகின்ற மொழியில் எடுத்துச் சொன்னார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பள்ளி ஆசிரியராகத்தான் தன் பொது வாழ்க்கையைத் தொடங்கினார். கலைஞர் அவர்களின் முதல் பணியே ஆசிரியர் பணிதான். `மாணவ நேசன்', `முரசொலி' போன்ற இதழ்களுக்கு ஆசிரியராகத்தான் தன் பொதுவாழ்க்கையைத் தொடங்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### பனகல் அரசர் பாடம்

நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவர் பனகல் அரசர் அவர்களைப் பற்றி, அந்த ஆசிரியர்கள் எடுத்த பாடமும், பாடப் புத்தகத்தில் இருந்த கருத்துகளும்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை பொது வாழ்க்கைக்கு வர வைத்தன.

ஒரு இயக்கத்தை எப்படி வழிநடத்த வேண்டும். ஒரு அரசை எப்படித் திறம்பட நடத்த வேண்டும் என்று இந்தியாவுக்கே ஆசிரியராக இருந்தவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆகவேதான், ஆசிரியர்களின் மேல் நம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எப்போதும் ஒரு தனி அக்கறை உண்டு. நம் முதலமைச்சர் அவர்களும் ஆசிரியர்களின் நலன்களில் தனி கவனம் செலுத்தி வருகிறார்கள்.

### இந்தியாவிலேயே முதன்முறை

ஒரு மாணவன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், என்னென்ன செய்ய வேண்டும் என்று ஆசிரியர் இடத்திலிருந்து சிந்தித்துத் திட்டங்களைத் தந்து கொண்டிருப்பவர் தான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதனால்தான், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது, நம் தமிழ்நாட்டில்தான்.

இன்று அந்தத் திட்டம் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுப் படுத்தப்பட்டுள்ளது. திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் அந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகிறார்கள். பெண்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று உயர்கல்வியில் படிக்கும் மாணவிகளுக்குப் `புதுமைப்பெண்' என்ற திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் 3 லட்சம் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், மாணவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் முதல் `தமிழ்ப்புதல்வன்' என்ற திட்டம். அரசு பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேர்ந்துள்ள 3 லட்சத்து 73 ஆயிரம் மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

உங்களிடம் படித்த அரசுப் பள்ளி மாணவர்கள் இன்று நூற்றுக்கணக்கில் ஐ.ஐ.டி, என்.ஐ.டி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிக்கிறார்கள். நம் அரசு சார்பாக வழங்கப்படுகின்ற பயிற்சி மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டல்தான் அத்தனை சாதனைகளுக்கும் ஒரே காரணம்.

நம் முதலமைச்சர் அவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்கின்ற அரசுப் பள்ளி மாணவர்களின் முதல் பயணச் செலவையும், முதல் ஆண்டிற்கான முழுச்செலவையும் கழக அரசே ஏற்கும் என்ற சிறப்பான அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களில் எல்லாம் மாணவர்கள், பெற்றோர்களுக்கு மட்டுமல்ல,

> **“ஒரு மாணவன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், என்னென்ன செய்ய வேண்டும் என்று ஆசிரியர் இடத்திலிருந்து சிந்தித்துத் திட்டங்களைத் தந்து கொண்டிருப்பவர் தான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதனால்தான், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப் படுத்தப்பட்டது, நம் தமிழ்நாட்டில்தான்.”**

ஆசிரியர்களாகிய உங்களுக்கும் மன நிறைவைத் தரும் என்ற நம்பிக்கை, இந்த அரசிற்கு இருக்கிறது.

### தனி வரலாறு உண்டு

மனிதர்களுக்கு மட்டும்தான் சிந்திக்கின்ற ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றலைத் தூண்டுவது ஆசிரியர்களாகிய உங்களின் கடமை. அப்போதுதான் நம் மாணவர்கள் அறிவில் சிறந்தவர்களாக வளர்ந்து வருவார்கள். தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு என்று தனி வரலாறு உண்டு. நீதிக் கட்சிக் காலத்தில் தொடங்கி, திராவிட மாடல் ஆட்சி வரை 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இந்த வரலாறு. நம் அரசின் பாடத்திட்டத்தைப் பற்றி ஒருவர் குறை சொல்லியிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு நம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் ஒரு சிறந்த பதிலைக் கொடுத்திருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரை மாணவர்களை சுயமாக சிந்திக்கத் தூண்டுகின்ற கல்விமுறைதான் சிறந்த கல்விமுறை. அந்த வகையில் பார்த்தால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டின் கல்விமுறைதான் மாணவர்களைச் சிந்திக்க வைக்கின்ற கல்வி முறை. எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என்ற பகுத்தறிவுடன் கேள்வி கேட்கின்ற கல்வி முறையாக நம் தமிழ்நாட்டுக் கல்வி முறை அமைந்திருக்கிறது.

நம் தமிழ்நாடு பாடத்திட்டத்தில் படித்த எத்தனையோ பேர் மிகச்சிறந்த விஞ்ஞானிகளாக வந்திருக்கிறார்கள். வீரமுத்துவேல் மாதிரி, இஸ்ரோவில் பெரிய பொறுப்புகளில் இருக்கிறார்கள். நம் அரசு பள்ளியில் உங்களிடம் படித்த மாணவர்கள் பல பேர் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஐ.டி துறைகளில் பெரிய, பெரிய பொறுப்புகளில் இருக்கிறார்கள்.

### தமிழ்நாட்டின் கல்வி முறை

அப்படி இருக்கும்போது, தமிழ்நாட்டின் கல்வி முறையை குறை சொல்வதை நாம் எந்த நாளும் ஏற்க முடியாது. அப்படி யாராவது குறை சொன்னால், அது நம் பள்ளி மாணவர்களை, நம் ஆசிரியர்களை அவமதிப்பதற்கு சமம். அதனை நம் முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும் என்றைக்கும் அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறிக்கொண்டு யார் என்ன சொன்னாலும், இப்போது நமது பாடத்திட்டத்தைப் படிக்கின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் பல சாதனைகளைப் படைக்கப் போவது உறுதி, என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த சாதனைகளுக்கெல்லாம் இங்கு வந்திருக்கின்ற ஆசிரியர்கள் நீங்கள், ஒவ்வொருவரும் அடிப்படைக் காரணம் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய துறையின் நிகழ்ச்சியைவிட அதிகமாக கலந்துகொள்வது அவருடைய துறையின் நிகழ்ச்சிகளில்தான். நான் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், அங்கு ஏதாவது ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து விடுவார்.

நேற்றும், இன்றும் நான் செங்கல்பட்டு மாவட்டத்தில் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதாக இருந்தது. அவர் என்னிடத்தில் கேட்டார், `நான் 5-ஆம் தேதி ஆசிரியர் தின நிகழ்ச்சி நடத்த வேண்டும், அதில் நீங்கள் கலந்துகொள்ள வேண்டும்' என்று கேட்டார். `நான் ஊரில் இல்லை' என்று சொல்லிவிட்டேன். `காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆய்வு நிகழ்ச்சிகள், திருமண நிகழ்ச்சிகள் எல்லாம் இருக்கு' என்று சொன்னேன். உடனே, அவர் நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ, அங்கேயே நடத்துகிறேன்' என்று சொல்லிவிட்டார்.

### விளையாட்டில் விருதுகள்

நானும் பெரும்பாலும் அவர் நிகழ்ச்சியில் எப்படியாவது கலந்து கொள்வேன். ஏனென்றால், இங்கு இருக்கின்ற அமைச்சர்களிலேயே பார்த்தீர்கள் என்றால், அவர்தான் அதிகமாக சுற்றிக்கொண்டே இருப்பார். எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு பள்ளியில் ஆய்வு செய்து கொண்டிருப்பார். அப்படி இல்லை என்றால், வெளிநாட்டில் இருப்பார்.

வெளிநாட்டிற்கு மாணவர்கள், ஆசிரியர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு போய் வருவார். ஒரு வாரத்திற்கு முன்புகூட அவர் ஹாங்காங்கில் இருந்தார். இப்படி அவர் எப்போதெல்லாம் தமிழ்நாட்டிற்கு வந்து விடுகிறாரோ, அதனால் அவர் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும், அதை தவிர்க்க முடியாமல் கலந்துகொள்வேன். அந்த வகையில், இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் இங்கு வந்துள்ள ஆசிரியர்களுக்கு விளையாட்டுத் துறையின் அமைச்சர் என்ற வகையில், ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். வழக்கமாக நான் வைக்கின்ற கோரிக்கைதான். நீங்களெல்லாம் விருது பெற்றுள்ள ஆசிரியர்கள். நீங்கள் விருது பெறுவதைப் போல நம் மாணவச் செல்வங்களும் விளையாட்டில் விருதுகளையும், பதக்கங்களையும் பெறவேண்டும். நன்றாக விளையாடுகின்ற மாணவன் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பான். ஆரோக்கியமாக இருக்கின்ற மாணவன்தான் நன்றாகப் படிப்பான். எனவே, விளையாட்டு வகுப்பை மட்டும் தயவு செய்து கடன் வாங்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஆசிரியர்களுக்கும் போட்டிகள்

விளையாட்டுத்துறையின் சார்பாக வருடா, வருடம் நாங்கள் முதலமைச்சர் விளையாட்டுக் கோப்பைப் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் மூலம் ஒரு கோரிக்கை. ஆசிரியர்களுக்கும் போட்டிகள் நடத்துங்கள். என் விளையாட்டுத்துறையும், உங்களின் பள்ளிக்கல்வித்துறையும் சேர்ந்தே இந்தப் போட்டியை நடத்த வேண்டும். ஆசிரியர்கள் நீங்கள் விளையாடினால்தான் குழந்தைகளை யும் மாணவர்களையும் நீங்கள் விளையாட விடுவீர்கள்.

எனவே, அந்தக் கோரிக்கையையும் உங்களிடத்தில் வைக்கிறேன். ஆசிரியர்களாகிய நீங்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள் அண்ணன் அன்பரசன் சொன்னதைப்போல, இது டெங்கு காய்ச்சல் எல்லாம் கிடையாது சாதாரண வைரல் காய்ச்சல் விரைவில் அது சரியாகிவிடும். அதற்கு நம் முதலமைச்சர் அவர்கள் சரியான மருந்தை உங்களுக்கு சரியான நேரத்தில் கொடுப்பார், என்று கூறிக்கொண்டு, விருது பெற்ற உங்கள் அனைவருக்கும், என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், எஸ்.ஆர்.ராஜா, சி.வி.எம்.பி.எழிலரசன், வரலட்சுமி மதுசூதனன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர் மதுமதி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் அருண்ராஜ் ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர்.கண்ணப்பன், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், பாடநூல் கழக மேலாண்மை இயக்குநர் சங்கர் ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வித்துறை பல்வேறு இயக்குநர்கள், தொடக்கல்வி இயக்கத்தின் இயக்குநர் முனைவர்.நரேஷ், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் உறுப்பினர் ராஜீவ்காந்தி, ஜாக்டோ ஜியோ தியாகராஜன், அப்துல் ரகுமான் கிரெசன்ட் பல்கலைக்கழக வேந்தர் ஆரிஃப் புகாரி, இணை வேந்தர் அப்துல் காதர் புகாரி, துணைவேந்தர் முனைவர் முருகேசன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ராஜா உசேன், ஆசிரியர்கள் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.